# சைவநெறி

## தரம் 10

## பாடத்திட்டம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
2007

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 10.1 | அறிமுகம் | i |
| 10.2 | பாடத்திட்டத்தின் நோக்கம் | ii |
| 10.3 | வகுப்புக்குரிய தேர்ச்சி | iii |
| 10.4 | கற்றல் - கற்பித்தல் முறை | iv |
| 10.5 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | v |
| 10.6 | கணிப்பீடும் மதிப்பீடும் | vii |
| 10.7 | பாடத்திட்டம் | 01 |
| 10.8 | உத்தேசப் பாடவேளைகள் | 08 |


Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.1 அறிமுகம்

விஞ்ஞான விருத்தியும் பொருளாதார மாற்றமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், மாணவர்களின் வாழ்வில் குறுக்கிடும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கத்தக்க ஆளுமையுள்ளவர்களாக்குவது கல்விக்கடமையும் பொறுப்புமாகும். இதற்குச் சமயம் மிகவும் பொருத்தமானது. சமயம் ஒரு வாழ்க்கை நெறி. மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கான நெறிமுறைகளையும் பண்புகளையும் அது அமைத்துத் தருகின்றது.

மனித வாழ்வில், சமயம் வகிக்கின்ற முதன்மைநிலை உணரப்பட்டமையாலேயே சைவநெறி இலங்கையில் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெற்று வருகிறது. மேலும், 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் புதிய கலைத் திட்டத்தில் இப்பாடம், பிரதான பாடங்கள் ஐந்தினுள் ஒன்றாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில், சைவநெறிப் பாடத்தினூடாக மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு மட்டுமன்றி, சமய அடிப்படையில் வையத்துள் வாழ்வாங்கு வாழும் திறனை விருத்தி செய்யக்கூடிய ஒழுக்கம், பண்பாடு, அறநெறிகள், ஆன்மீகப் பண்புகள், ஆளுமை பண்புகள் என்பனவும் விருத்தி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்ேது.

2007 இலிருந்து நடைமுறைக்கு வரும் கலைத்திட்டமானது, நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படையான தேர்ச்சிகளை வழங்கி, மாணவர்களை நல்ல பிரஜைகளாக உருவாக்குவதற்கு சமயக் கல்வியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பிரதான நோக்காகக் கொண்டுள்ளது.

அத்துடன்,

- இறைசிந்தனை
- சமய நம்பிக்கை
- சமய ஒழுகலாறுகளும் விழுமியங்களும்
- சமய இலக்கியங்களும் தத்துவங்களும்
- சமயமும் சமூக நடைமுறைகளும்
- சமய சமரசம்

என்னும் விடயங்களுக்கு முதன்மையளிப்பதாக, இப்பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தில் மாணவர்கள் அடையவேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய தேர்ச்சிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் தம்மாலான ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.2 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

01. அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் சமய ஒழுகலாறுகளை, இறை சிந்தனையுடன் கடைப்பிடித்தல்
02. சமய நம்பிக்கையே பக்தியின் அடிப்படை என்பதை உணர்ந்து, அவற்றைக் கடைப்பிடித்தல்
03. திருமுறைகளையும் பாசுரங்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுதல்
04. ஆலயங்களில் சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுதல்.
05. சமயப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து, அவற்றை முன்மாதிரியாகக் கொள்ளல்
06. சைவசித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கிக் கொள்ளல்
07. நாட்டார் சமய வழக்காறுகளையும் வரலாறுகளையும் அறிந்து அவற்றுக்கு மதிப்பளித்தல்
08. ஈழத்துச் சைவ மரபுகளைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை விருத்தி செய்தல்
09. சமய வாழ்க்கைக்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பினை விளங்கி நடைமுறைப் படுத்துதல்
10. இலங்கையில் வாழும் ஏனைய சமயத்தவர்களது சமய, கலாசார, பண்பாடுகளுக்கு மதிப்பளித்தல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 6.3 தரம் 10 க்குரிய தேர்ச்சிகள்

1.0 அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் சமய ஒழுகலாறுகளை இறை சிந்தனையுடன் கடைப்பிடிப்பர்.

2.0 சமய நம்பிக்கையே பக்தியின் அடிப்படை என்பதை உணர்ந்து அவற்றைக் கடைப்பிடிப்பர்.

3.0 திருமுறைகளையும் பாசுரங்களையும் தோத்திரப்பாடல்களையும் பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

4.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர்

5.0 சமயப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து, அவற்றை முன்-மாதிரியாகக் கொண்டு ஒழுகுவர்.

6.0 சைவ தத்துவக் கோட்பாடுகளை விளங்கித் தெளிவு பெற்று, அவை தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்துவர்.

7.0 நாட்டார் சமய வழிபாடுகளையும், வழக்காறுகளையும் அறிந்து, அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

6.0 ஈழத்துச் சைவ மரபுகளைப் பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை விருத்தி செய்வர்.

9.0 சமய வாழ்க்கைக்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பினை விருத்தி செய்வர்.

10.0 பிற சமயத்தவர்களது சமய, கலாசார, பண்பாடுகளுக்கு மதிப்பளிப்பர்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.4 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவுமட்டம் பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதிமிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவான 5 மாதிரி மிகச் சிறப்பான ஓர் அம்சமாகும். புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலை, மாணவர்களிடம் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படை அம்சமாகும்.

மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத் திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூகத் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், ஆன்மிகம் சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக்கூடிய ஒரு கற்றல் முறையாகவும் இது அமைந்துள்ளது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான ஒரு மாற்றத்தை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சமய பாடத்தைப் பொறுத்தவரை முக்கியமாக எதிர்பார்ப்பது நடத்தை மாற்றமேயாகும். அதனை ஏற்படுத்த ஓர் இலகு வழியாக தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சி மையக் கல்வியில் ஆசிரியரது வகிபாகம் தெளிவான மாற்றமொன்றை வேண்டி நிற்கின்றது. தாம் பெற்றிருக்கும் அறிவை மாணவர்களுக்கு அப்படியே ஒப்புவிப்பதன் மூலம் கல்வி இடமாற்றம் செய்பவராக விளங்கிய ஆசிரியரின் செயன்முறை ஆதிக்கம் மாற்றப்பட வேண்டியதொன்றாகும். தேர்ச்சியை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட சைவநெறி பாடத்- திட்டத்தில், சமயம்சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இங்கு மாணவரின் செயற்பாடு, பங்குபற்றல் என்பவற்றுக்கு அதிக இடம் வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடைய வேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவுமட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்ய வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவுமட்டத்தை எய்துவதற்கு வழிகாண்பது ஆசிரியரது கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் ஆரம்பத்திலேயே மாணவரிடம் விருப்பு, எதிர்பார்ப்பு என்பவற்றை ஏற்படுத்த வேண்டும். இங்கு விருத்தி செய்துகொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவு கூரப்படுவதும் அவசியமாகும். இதற்குப் பல்வேறு உத்திகளைக் கையாளலாம். வினாக்கேட்டல், படங்களைக் காட்சிப்படுத்தல், புதினத்தாள் செய்திப் பிரசுரங்களை முன்வைத்தல், அட்டைகளைக் காட்சிப்படுத்தல், திருமுறைப்பாடல் கவிதைகள் என்பவற்றைப் பாடச் செய்தல், போலச்செய்தல், பாடல்கள், ஒளி ஒலி நாடாக்கள் என்பவற்றைப் பயன்படுத்தல், செய்துகாட்டல் முதலானவை அவற்றுட் சிலவாகும்.

சைவநெறி வாழ்வியலுடன தொடர்புடைய ஒரு பாடமாகும். அதனால், கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டின் ஊடாக மாணவரிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆதலால், ஆசிரியர் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை நடத்துவதற்காகத் திறந்த உள்ளத்துடனும் போதிய திட்டமிடலுடனும் தயாராக வரவேண்டும். இங்கு மாதிரி மட்டுமே தரப்பட்டுள்ளன. தமது தற்றுணிவுக்கேற்ப மாதிரிகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் உரிமையுடையோராவர்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.5 பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித் திட்டமும்

- சைவசமயக் கல்வி கற்றல் - கற்பித்தல் தொடர்பாக பாடசாலையிலும் அயலிலும் கிடைக்கின்ற பௌதிக வளங்களையும் மனித வளங்களையும் மிக உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலையும் திட்டமிட்டுச் செயற்படுத்துவது அவசியமாகும்

- சைவ வணக்க, வழிபாட்டு முறைகளுக்கும், சமயம் சார்ந்த நடவடிக்கைகளுக்கும் என பாடசாலைக் கொள்கை இருத்தல் வேண்டும்

- சைவசமயக் கல்வியின் அவசியத்தை, தக்க ஆதாரங்களுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் உதவிகளையும் பெற்று கற்றலை வெற்றிகரமாக்கலாம்

- சைவசமயத்தைக் கற்பிப்பதற்கு, பாடசாலையில் வளப்பற்றாக்குறை ஏற்பட்டால் நிவர்த்தி செய்வதற்கு பெற்றோர், நலம்விரும்பிகள், பழைய மாணவர், சமய நிறுவனங்கள் போன்றவற்றின் ஒத்துழைப்புகளைப் பெறலாம்

மேற்படி கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், ஆற்றல் மிக்கோரை உருவாக்குவதற்கும், சைவசமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தை வளர்த் - தெடுப்பதற்கும் பொருத்த-மான பின்னணி பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில் பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இயைவுபடுத்தப்படல் அவசியமாகும்.

சைவநெறிப் பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின்பால் வழிப்படுத்தப்படும் மாணவரின் திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத்திட்டத்தை அமைத்துக்கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்புதிய பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும்போது சைவசமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.
Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பாடசாலையில் தினசரிப் பிரார்த்தனைகள், வெள்ளிக்கிழமைப் பிரார்த்தனை என்பவற்றுக்கு ஏற்ற வசதிகள் அளித்தல், மாணவர் அனைவரும் கலந்து கொள்ள வழி வகை செய்தல்
- ஆசிரியர்கள், மாணவர்கள் நற்சிந்தனை கூற இடமளித்தல்
- முடியுமானவிடத்து, வகுப்பறையில் சுவாமி படங்களை வைத்து வழிபட ஊக்குவித்தல்
- பாடசாலைக்கு அண்மையிலுள்ள ஆலயங்களுக்குச் செல்ல வழிப்படுத்தல்
- சமய தீட்சை வழங்கல்
- குருபூசை, பாடசாலைச் சமய விழா என்பவற்றினை ஒழுங்கு செய்தல்
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்
- மாணவரின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக்கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடத்தல்
- சமயப்பேச்சு, பண்ணிசை, நாடகப்போட்டிகளை ஒழுங்கு செய்தல்
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலையிலும் நடத்த ஒழுங்கு செய்தல்
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்களச் சுற்றுலாக்களையும் சமயச் சுற்றுலாக்களையும் திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கம் போன்றவற்றில் ஈடுபட மாணவரை ஊக்குவித்தல்
- வெவ்வேறு தலைப்புகளில் திட்டமிடப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடத்துதல்
- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்களில் பங்குகொள்ள ஊக்குவித்தல்

மேற்கூறியவற்றினூடாக, மாணவரின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக் கூடிய வகையில் செயற்பாடுகளை வழங்கலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்பையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்களிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கையையும் வேலைத்திட்டத்தையும் வகுத்துக் கொள்ளல் வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக, பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியையும் பெற்றுக்கொள்ளலாம். மேலும், செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காக, தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதி மிக்க நேரமுகாமையும் மிக முக்கியமானவையாகும்.

பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்து -வதனால், அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவித்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்க- லாம் என்பதில் ஐயமில்லை.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 10.6 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக, மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கு ஏற்ற இலகுவான வழிமுறைகளாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்துள்ளன.

மாணவரின் நடத்தைசார் பண்புகள், வணக்க வழிபாடுகளில் அவர்கள் கொண்டுள்ள
அக்கறை, சமய, சமூக செயற்பாடுகளில் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், இணைப்பாட - விதானச் செயற்பாடுகளின் போது வெளிக்காட்டும் பங்கேற்கும் தன்மை என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இவற்றை முறை சார்ந்த, முறை சாராத வழிகளில் வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் கணிப்பீடு செய்ய முடியும்.

மதிப்பீட்டினைப் பல வழிகளில் மேற்கொள்ள முடியும். புாடம் தொடர்பான மதிப்பீடு பாட அலகின் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் போது, வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற்கொள்ளப்பட முடியும்.
தவிர, தவணை இறுதியில் ஒப்படை, செயற்றிட்டங்களை வழங்குதல் என்பவற்றினூடாக மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

மேலும், திருமுறைகள் தோத்திரப் பாடல்கள் பாடும்போது, மாணவர் பிழையற மனனம் செய்து, உச்சரிப்புத் தெளிவு, பண், இசை என்பவற்றுடன் சரியான நிலையில் நின்று பாடுகிறார்களா என்பதையும், கணிப்பீடு செய்ய வேண்டும். அவ்வாறே, ஆலய வழிபாடு, அங்கு செய்யப்படும் நமஸ்கார முறைகளையும் தெய்வங்களை வழிபடும் ஒழுங்கு முறைகளையும் அவதானிக்க வேண்டும். இவற்றுக்கு ஏற்ற மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளை முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும்.

1.0 அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத்தக்கதாக, சமய ஒழுகலாறுகளை, இறை சிந்தனையுடன் கடைப்பிடிப்பர்.

1.1 கடவுள் உள்பொருள் என்பதையும், எல்லாச் செயல்களுக்கும் அவரே ஆதாரம் என்பதையும் ஏற்று, தத்துவ நோக்கில் விளக்குவர்.

- **கடவுள்**
  - பதியின் தத்துவத்தை சைவ சித்தாந்த நூல்கள் ஊடாக விளக்குதல்
  - பதியின் இயல்புகளை எடுத்துக்காட்டுகள் ஊடாக முன்வைத்தல் (திருமுறைகள், தோத்திரப் பாடல்கள்)

1.2 நற்பண்புகளை மேம்படுத்துவதற்காக நாளாந்தக் கடமைகளிலும், ஏனைய செயற்பாடுகளிலும் இறை சிந்தனையுடன் ஈடுபடுவர்.

- **வீட்டில் சமயம்**
  - வீட்டில் சமய அனுட்டானங்களையும், வழிபாடுகளையும் கடைப்பிடித்தல்
- **பாடசாலையில் சமயம்**
  - பாடசாலையில் நாயன்மார், சைவப்பெரியார் குருபூசைகளைக் கொண்டாடுதல்; அவை பற்றி விபரித்தல்
  - பாடசாலையில் சமய விழாக்களைக் கொண்டாடுதல்; அதன் சமய, தத்துவ விளக்கங்களை எடுத்துக்கூறல்
- **கோயிலும் சமயமும்**
  - கோயில் வழிபாட்டு முறைகளை அறிதலும், பின்பற்றலும்
  - கோயிலின் அமைப்புப் பற்றி விபரித்தல்
  - கோயிலிலுள்ள வெவ்வேறு விக்கிரகங்களை இனங்கண்டு விளக்குதல்
  - நித்திய, நைமித்தியகாமிக கிரிகைகள் பற்றி சுருக்க விளக்கம் பெறல்
  - பிரம்மோற்சவம் பற்றி அறிதலும்; ஆலயத்துக்கும் சமூகத்துக்குமிடையே உள்ள உறவுகளை இனங்காணலும்; அவற்றைக் கடைப்பிடித்தலும்

1.3 வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் சமய ஒழுகலாறுகளையும், வழக்காறுகளையும் பின்பற்றுவர்.

- **சமய விழுமியங்கள்**
  - தனி மனிதனின் உளவிருத்திக்கு அடிப்படையாக உள்ள, மனித நேயத்தை வாழ்வில் கடைப்பிடித்தல்
  - நற்பண்புகளைக் கடைப்பிடித்தல்
  - தியாக மனப்பாங்கு; ஏழை எளியவர்களுக்கு இரங்குதல்/உதவுதல்
  - பிறரில் நிறை காணல்
  - பிறரை நேசித்தல்; பிறரின் கஷ்டங்களுக்காகப் பிரார்த்தித்தல்
  - உலகம் தழுவிய அன்பு
    ( ''யாதும் ஊரே; யாவரும் கேளீர்...''
    ''எல்லாரும் இன்புற்றிருப்ப...''
    ''இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க'')

1.4 வாழ்க்கை முன்னேற்றத்திற்காக வாழ்வியல் சடங்குகளையும், அவற்றின் முக்கியத்துவங்களையும் இனங்கண்டு, அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

- தொழில் அடிப்படையிலான சடங்குகளை அவதானித்தல்: அவை பற்றி விபரித்தல்
  - **வாழ்வியல் சடங்குகள்**
    ஏர்மங்கலம்
    முளைப்பாலிகை
    பொலிச்சடங்கு
    ஆயுதபூசை



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- விரதங்கள், அவற்றின் சமய, சமூக முக்கியத்துவம் என்பவற்றை விளங்கி, விரதங்களை அனுட்டித்தல்

- **விரதங்கள்**

  மாத விரதங்கள் : தைப்பூசம்<br>மாசிமகம்<br>பங்குனி உத்தரம்<br>பங்குனித் திங்கள்

  கடவுளுக்குரிய விரதங்கள் : பெருங்கதை விரதம்<br>திருவாதிரை விரதம்<br>திருப்பாவை<br>கந்தசஷ்டி விரதம்<br>கேதார கௌரி விரதம்

- பண்டிகைகள் உணர்த்தும் முக்கிய பண்புகளைக் கடைப்பிடித்தல்

- **பண்டிகைகள்**
  - **தைப்பொங்கல்**
    - கடவுள் வழிபாடு
    - நன்றி மறவாமை
    - கொடுத்துண்ணும் பண்பு
  - **சித்திரை வருடப்பிறப்பு**
    - கடவுள் வழிபாடு
    - பெற்றோர், பெரியோரை வணங்குதல்
    - உறவு விருத்தி
    - மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளல்
    - கலைகளைப் பேணுதல்

2.0 சமய நம்பிக்கையே பக்தியின் அடிப்படை என்பதை உணர்ந்து, அவற்றைப் பின்பற்றுவர்.

- தீவிர பக்தியூடாகவும் இறைவனை அடையலாம் என்பதை விளக்குதல்
- தீவிர பக்தியாளர்களை இறைவன் தம்முடைய ஆணைக்குட்படுத்தி, அவர்களை முதன்மைப்படுத்துவார் என்பதைக் கதையூடாக விபரித்தல்
  - **சண்டேசுர நாயனார்**

3.0 திருமுறைப்பாடல்கள், பாசுரங்கள், தோத்திரப் பாடல்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இனங்கண்டு, வாழ்வியல் முன்னேற்றத்திற்காக அவற்றைக் கடைப்பிடிப்பர்.

3.1 திருமுறைகளையும், பாசுரங்களையும், தோத்திரப் பாடல்களையும் இனங்காண்பர்; பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.

- பிழையறப் பண்ணோடு பாடுதல்; பக்தியை வெளிப்படுத்தும் வகையில் பாடுதல்
- பொருள் கூறுதல்
- அருஞ் சொற்களை விளக்குதல்
- பொழிப்புரை எழுதுதல்
- சந்தர்ப்பம் கூறுதல்

- **திருமுறைப் பாடல்கள் (மனனத்திற்குரியவை)**

  1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

  (அ) ‘‘சிறையாரும் மடக்கிளியே...’’

  (ஆ) ‘‘வேயுறுதோளி பங்கன்...’’

  (இ) ‘‘இடரினும் தளரினும்...’’



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

2. **திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்**
(அ) ‘‘திருவே என் செல்வமே.........’’
(ஆ) ‘‘திருக்கோயில் இல்லாத.........’’
(இ) ‘‘சங்கநிதி பதும நிதி.............’’

3. **சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்**
(அ) ‘‘கோலமால் வரை..................’’
(ஆ) ‘‘ஆலந்தானுகந்து....................’’
(இ) ‘‘மூவரென இருவரென.............’’

4. **மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்**
(அ) ‘‘ஆதியும் அந்தமும்..............’’
(ஆ) ‘‘மாறிநின்று...........................’’
(இ) ‘‘தந்ததுன்றன்னை...................’’

5. **திருவிசைப்பா**
(அ) ‘‘நீறணி பவளக்குன்றே............’’

6. **திருப்பல்லாண்டு**
(அ) ‘‘தாதையைத் தாளற.............’’

7. **திருமூலர் திருமந்திரம்**
(அ) ‘‘சிவ சிவ என்கிலர்................’’

8. **மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை** (கபில தேவ நாயனார்)
(அ) ‘‘விநாயகனே..........................’’

9. **பெரிய புராணம்**
(அ) ‘‘ஆதியாய் நடுவுமாகி...........’’

10. **திருப்புகழ்**
(அ) ‘‘பாதிமதி நதி........................’’

3.2 திருமுறைகளின் வைப்பு முறைகளையும், நாலாயிர திவ்விய பிரபந்தத்தின் தொகுப்பு முறைகளையும், தோத்திரப் பாடங்களின் தனித்துவத்தையும் விளக்குவர்.

• **திருமுறைகளும் தோத்திரப்பாடல்களும்**
- பன்னிரு திருமுறைகள் எவையெனவும், அவற்றின் ஆசிரியர்களையும் விபரித்தல்
- திருமுறைகளைத் தொகுத்தவர்; தொகுப்பித்தவர் பற்றிக் குறிப்பிடல்
- நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தின் தொகுப்புப் பற்றி விளக்கல்
- தோத்திரப் பாடல்கள், அவற்றின் தனித்துவத் தன்மைகளை எடுத்துக் கூறல்

3.3 திருமுறைகளில் காணப்படும் புராண, இதிகாசக் கதைகளையும் இனங்காண்பதுடன், அவற்றிலே முன் வைக்கப்பட்டுள்ள அறிவுரைகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பர்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

3.4 பெரிய புராணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடல்களை அடிப்படை யாகக் கொண்டு, சமய உணர்வுகளை விருத்தி செய்வர்.

- **சமய இலக்கியம் (**பெரிய புராணம் - தடுத்தாட்கொண்ட புராணம்**)**
  - கதைச் சுருக்கத்தைக் கூறுதல்
  - அறப்பண்புகள், தத்துவக் கருத்துக்களை இனங்கண்டு விளக்குதல்
  - இரசனை உணர்வை வளர்த்தல்
  - வகுத்தும் தொகுத்தும் கூறுதல்
  - புராண படனஞ் செய்தல்

4.0 சமய வழிபாட்டு முறைகளை விதிப்படி பேணுவர்.

4.1 ஆலயக் கிரியைகளின் தத்துவ நோக்கினை விளக்கமாக விபரிப்பர்.

- **ஆலயக் கிரிகைகள்**
  - நித்திய, காமிகக் கிரியைகள், அவற்றின் தத்துவங்களை விளக்குதல்
  - நைமித்திய கிரியைகளை விளக்குதல்
  - மகோற்சவங்களின் ஒழுங்குமுறை, அவற்றின் தத்துவங்கள் என்பவற்றை எடுத்துரைத்தல்
  - மகோற்சவங்களுக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவை இனங்கண்டு அவற்றை விருத்தி செய்தல்

5.0 சமயப் பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை அறிந்து, அவற்றை முன் மாதிரியாகக் கொண்டு ஒழுகுவர்.

5.1 நாயன்மார், சந்தான குரவர்கள், சித்தர்கள், இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் வாழ்ந்த பக்தியாளர்கள், சமயம் வளர்த்த பெரியார்கள் ஆகியோரது வரலாறுகளையும் பணிகளையும் அறிந்து அவற்றை விபரிப்பர். அவர்களுக்கு மதிப்பளித்து அவர்கள் வழி ஒழுகுவர்.

- **நால்வர் பணிகள்**
  - நாயன்மார்களின் பக்தி அனுபவங்களையும் அவர்களின் தலைமைத்துவப் பண்புகளையும் இனங்காணல்
  - நாயன்மார் கடைப்பிடித்த சமய, சமூக சேவைகளைப் பின்பற்றுதல்
- **சந்தான குரவர்கள்**
  - சந்தான குரவர் பரம்பரையையும் அவர்களது பணிகளையும் விளக்குதல்
- **சித்தர்கள்**
  - சித்தர்களின் வாழ்க்கையும், அனுபவங்களும்
- **அபிராமிப்பட்டர்**
  - அபிராமிப்பட்டர் பற்றி அறிதலும்; அவரது பணிகளை இனங்கண்டு மதிப்பளித்தலும்
- **இலங்கையில் சமயம் வளர்த்த பெரியார்கள்**
  - இந்துபோர்ட் இராசரத்தினம்
  - சேர். பொன். இராமநாதன் -

  இலங்கையில் சமய சீர்திருத்தவாதிகளாகவும், தொண்டர்களாகவும் விளங்கியவர்களின் பணிகளை மதிப்பிடல்

6.0 சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விளங்கி, வெளிப்படுத்துவர்.

6.1 சைவ சித்தாந்தம் ஏற்றுக் கொள்ளும் முப்பொருள் உண்மைகளையும் அதன் இயல்புகளையும் நூலாதாரங்களுடன் விளக்குவர்.

- **முப்பொருள் விளக்கம்** (சாத்திர நூல்களினூடாக)
  - பதியின் இயல்பை அறிதல், விபரித்தல்
  - பசுவின் தன்மைகளை எடுத்துக்கூறல்
  - பசுவுக்கும், பதிக்கும் இடையிலான தொடர்பை இனங்காணல்
  - பாசம், பாசத்தின் இயல்பு பற்றி விளக்கல்
  - பாசத்திற்கும், பசுவிற்கும் இடையிலான தொடர்பை விளக்குதல்
  - பாசத்திலிருந்து விடுபடும் மார்க்கங்களைக் கூறல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

6.2 விதிக்கப்பட்ட திருவருட்பயன் அதிகாரங்களை (1-5) அடிப்படையாகக் கொண்டு, முப்பொருள் உண்மைகளை வகுத்தும், தொகுத்தும் கூறுவர்.

- **திருவருட்பயன்** (1 - 5 அதிகாரங்கள் )
  - திருவருட்பயன் பாடல்களை மனனம் செய்தல்
  - அதிகாரங்களில் உள்ள கருத்துக்களைத் தொகுத்துக் கூறுதல்
  - தேவையானவிடத்து திருவருட்பயன் பாடல்களை மேற்கோள் காட்டும் திறனைப் பெறுதல்

6.3 ஆன்மீக விடுதலைக்கான மார்க்கங்களைக் கடைப்பிடிப்பர்.

- **குரு, லிங்க, சங்கம வழிபாடு**

7.0 நாட்டார் சமய வழிபாடுகளையும், வழக்காறுகளையும் அறிந்து, அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

7.1 நாட்டார் தெய்வங்கள், அவற்றின் வகைகள் பற்றி விளக்குவர்.

- **நாட்டார் தெய்வங்கள்**
  - நாட்டார் தெய்வங்களின் ஆற்றலைஅறிந்து, அவற்றுக்கு மதிப்பளித்தல்
  - நாட்டார் வழிபாட்டில் அம்மன், வைரவர் வழிபாடுகள் பற்றியும் அவற்றுக்குரிய வழிபாட்டு முறைகள் பற்றியும் அறிந்து, அவை பற்றி விளக்குதல்

7.2 நாட்டார் தெய்வங்களுக்கான சடங்கு முறைகளை அவதானித்து, அவை பற்றி விபரிப்பர்.

- நாட்டார் தெய்வ வழிபாட்டில் பின்பற்றப்படும் சடங்கு முறைகளைக் குறிப்பிடல்
- சடங்குகளை அவதானித்து, அவை பற்றி விபரித்தல்
- சடங்குகளுடன் தொடர்புடைய தகவல்களைச் சேகரித்து அவை பற்றி எடுத்துக் கூறுதல்
- வெவ்வேறு தெய்வங்களுக்கான சடங்கு முறைகளை இனங்காணல்
- சடங்கு முறைகளில் பின்பற்றப்படும் பிராந்திய வேறுபாடுகளைக் கண்டறிதல்; ஒப்பிடுதல்

- **சடங்கு முறைகள்**:
  - மடை பரவல்
  - நோற்புக் கட்டல்
  - சந்தனக் காப்பிடல்
  - கரகம் பாலித்தல்
  - தெய்வமாடல்
  - பூப்பந்தல் ஆடல்
  - காவியம்/ தாலாட்டுப்பாடல்
  - வழக்குரை
  - குளிர்த்தி பாடல்
  - பொங்கல்
  - தீமிதிப்பு

7.3 நாட்டார் தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் சடங்கு நிலைப்பட்ட நிகழ் கலைகளை இனங்காண்பர்.

- **சடங்கு நிலைப்பட்ட நாட்டார் நிகழ்கலைகள்**
  - சடங்கு நிலைப்பட்ட நாட்டார் நிகழ் கலைகளைப் பற்றி விபரித்தல் (கொம்பு விளையாட்டு, வசந்தன் கூத்து, கரகாட்டம், காவடி, உடுக்கை, பறை, தப்பு. கும்மி......)
  - சடங்கு நாட்டார் நிகழ் கலைகளை ரசிக்கும், மதிக்கும் மனப்பாங்கினை விருத்தி செய்தல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

8.0 ஈழத்துச் சைவமரபினை பேணிக்காக்க வேண்டும் என்னும் மனப்பாங்கினை விருத்தி செய்வர்.

8.1 ஈழத்து சைவ மரபின் தொன்மை, வரலாறு என்பவற்றை ஆதாரத்துடன் முன்வைப்பர்.

- **ஈழத்துச் சைவமரபு**
  - புராண, இதிகாசங்களை ஆதாரமாகக் கொண்டு ஈழத்துச் சைவ மரபின் தொன்மை, வரலாறு என்பவற்றை விளக்குதல்
  - தொல்பொருட்களைச் சான்று காட்டுதல்
  - பிறநாட்டார் செய்திகளினூடாக சைவமரபின் வரலாற்றை இனங்காணல்
  - இலக்கியங்கள் வாயிலாக வரலாற்றுச் செய்திகளை முன்வைத்தல்

8.2 ஈழத்துச் சைவ ஆலயங்களையும் அவற்றின் சிறப்பம்சங்களையும் விபரிப்பர்.

- ஆலய வகைகளையும் அவற்றின் பல்வேறு அம்சங்களையும் பகுத்து ஆராய்வர்; அவை பற்றி விபரிப்பர்.

- **விநாயகர் ஆலயம்**
  - மாமாங்கப்பிள்ளையார் ஆலயம்
- **சிவாலயங்கள்**
  - கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
  - ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலயம்
- **முருகன் ஆலயங்கள்**
  - மண்டூர் முருகன் ஆலயம்
  - நல்லூர் கந்தசுவாமி ஆலயம்
- **அம்மன் ஆலயம்**
  - நயினை நாகபூசணியம்மன் ஆலயம்
- **விஷ்ணு ஆலயம்**
  - வல்லிபுர ஆழ்வார் ஆலயம்

- ஈழத்துச் சைவ ஆலயங்களுக்குத் தலயாத்திரை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை விபரித்தல்

8.3 ஈழத்துச் சைவ இலக்கிய மரபுகளை இனங்கண்டு, விளக்கம் பெறுவர்.

- **ஈழத்துச் சமய இலக்கியங்கள்**

- சிவராத்திரி புராணம்
- ஏகாதசிப் புராணம்
  - ஈழத்தில் எழுந்த சமய இலக்கியங்களுள் விரத மகிமை கூறும் புராணங்களை இனங்காணல்; அவை பற்றிய விடயங்களை விபரித்தல்
- திருக்கரசைப் புராணம்
  தல மகிமை கூறும் புராணம் பற்றி விளக்குதல்

8.4 ஈழத்துச் சைவ நிறுவனங்களையும் அவற்றின் பணிகளையும் பகுப்பாய்வு செய்வர்.

- **சைவ வித்யா விருத்திச் சங்கம்**

- ஈழத்தில் சைவக்கல்விப் பாரம்பரியத்திற்கும், வளர்ச்சிக்கும் சைவ வித்யா விருத்திச் சங்கம் ஆற்றிய பணிகளை மதிப்பிடுல்

9.0 சமய வாழ்க்கைக்கும் சூழலுக்கும் இடையிலான தொடர்பினை விருத்தி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவர்.

- **சமயமும் சூழலும்**
    - இளைஞர்கள், சைவ அமைப்புகளோடு ஒன்றிணைந்து ஆலயச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளல்; சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்
    - ஆலயம், பாடசாலை, பொது இடங்களில் சிரமதானம் மேற்கொள்ளல், அவ்விடங்களைப் பாதுகாத்தல்
    - சமயச் சுற்றுலாக்களை மேற்கொண்டு, தல மகிமைகளைத் தொகுத்தல்
    - ஆலயங்கள் தமது பாரம்பரிய உரிமைச் சின்னங்கள் என்பதை உணர்ந்து, அவற்றைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல்

10.0 ஏனைய சமயத்தவர்களது சமய, கலாசார பண்பாடுகளுக்கு மதிப்பளிப்பர்.

- **வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்**
    - பிற சமய மக்களுடன் சுமுகமான உறவை வளர்த்தல்
    - விழாக்களை அறிந்து, அவற்றிற்கு மதிப்பளித்தல்
    - வழிபாட்டு இடங்களுக்கு மதிப்பளித்தல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 6.8 கற்பித்தலுக்கான உத்தேசப் பாடவேளைகள்

| தேர்ச்சி | | பாடவேளைகள் |
|---|---|---|
| 1.0 | | 12 |
| 2.0 | | 1 |
| 3.0 | | 12 |
| 4.0 | | 2 |
| 5.0 | | 11 |
| 6.0 | | 10 |
| 7.0 | | 4 |
| 8.0 | | 9 |
| 9.0 | | 1 |
| 10.0 | | 1 |
| | மொத்தம் | 63 |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.